

முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் தலைமையில் நேற்று (14.12.2024) தலைமைச் செயலகத்தில், தமிழ்நாட்டின் தென் மாவட்டங்களில் கனமழை பெய்துவருவதையொட்டி மேற்கொள்ளப்பட்டு வரும் முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் மற்றும் நிவாரணப் பணிகள் குறித்து ஆய்வுக் கூட்டம் நடைபெற்றது. இந்தக் கூட்டத்தில், நீர்வளத்துறை அமைச்சர் துரைமுருகன், வருவாய் நிருவாக ஆணையர் / கூடுதல் தலைமைச் செயலாளர் ராஜேஷ் லக்கானி, நீர்வளத்துறை கூடுதல் தலைமைச் செயலாளர் டாக்டர் க. மணிவாசன், வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை முதன்மைச் செயலாளர் திருமதி பெ. அமுதா, வேளாண்மை – உழவர் நலத்துறை முதன்மைச் செயலாளர் செல்வி அபூர்வா, கால்நடை பராமரிப்பு, பால்வளம், மீன்வளம் மற்றும் மீனவர் நலத்துறை முதன்மைச் செயலாளர் சத்யபிரத சாகு மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.



தமிழ்நாடு முதலமைச்சர், கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்களை, சேலம் உருக்காலை அங்கீகாரத் தேர்தலில் தொடர்ந்து மூன்றாவது முறையாக வெற்றி பெற்ற தொ.மு.ச. நிர்வாகிகளான சிவகுமார், செந்தில்குமார், துரைராஜ், பாரதிராஜா மற்றும் தோழமைக் கட்சி நிர்வாகிகளான ரவிச்சந்திரன், பூபாலன் சுந்தரகிருஷ்ணன், கதிர்வேல் ஆகியோர் சென்னை, அண்ணா அறிவாலயத்தில் உள்ள கழக அலுவலகத்தில், நேற்று முன்தினம் (13–12–2024) நேரில் சந்தித்து வாழ்த்துப் பெற்றனர். அதுபோது கழகப் பொதுச்செயலாளர் துரைமுருகன், சேலம் மத்திய மாவட்டச் செயலாளரும் –அமைச்சருமான ஆர்.இராஜேந்திரன், தொ.மு.ச. பேரவைத் தலைவர் கி.நடராஜன், சேலம் மாவட்ட தொ.மு.ச. கவுன்சில் தலைவர் வி.மணி ஆகியோர் உடனிருந்தனர்.

### தென் மாவட்டங்களில் கனமழை:

# முன்னெச்சரிக்கை மற்றும் நிவாரண நடவடிக்கைகள்!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் தலைமையில் ஆய்வுக் கூட்டம்!

**சென்னை, டிச. 15-**

**முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் தலைமையில் நேற்று (14.12.2024) தலைமைச் செயலகத்தில், தமிழ்நாட்டின் தென் மாவட்டங்களில் கனமழை பெய்து வருவதையொட்டி மேற்கொள்ளப்பட்டு வரும் முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் மற்றும் நிவாரணப் பணிகள் குறித்து ஆய்வுக் கூட்டம் நடை பெற்றது.**

வங்கக்கடலில் உருவான காற்றமுத்த தாழ்வு பகுதி காரணமாக கடந்த 3 நாட்களாக தமிழ்நாட்டில் பரவலாக மழை பெய்து வருகிறது. குறிப்பாக, திருநெல்வேலி, தென்காசி மற்றும் தூத்துக்குடி மாவட்டங்களில் பல இடங்களில் கனமழை முதல் அதி கனமழை பதிவானதன் காரண மாக, தாமிரபரணி ஆற்றில் வெள்ளப்பெருக்கு ஏற்பட்டுள்ளது.

தமிழகத்தின் தென் மாவட்டங்களில் கனமழை பெய்து வருவதால், மாநில அவசரகால செயல்பாட்டு மையத்திற்கு நேற்று முன்தினம் (13.12.2024) முதலமைச்சர் அவர்கள், நேரில் சென்று ஆய்வு மேற்கொண்டு, திருநெல்வேலி, தூத்துக்குடி மற்றும் தென்காசி மாவட்ட ஆட்சித் தலைவர்கள் மற்றும் மாவட்ட கண்காணிப்பு அலுவலர்களுடன் காணொலிக் காட்சி வாயிலாக, கனமழை காரணமாக ஏற்பட்டுள்ள பாதிப்புகள் குறித்தும், மேற்கொள்ளப்பட்டு வரும் நிவாரண பணிகள் குறித்தும் கேட்டறிந்து தேவையான அறிவுரைகள் வழங்கினார்.

**பாதுகாப்பான இடங்களில் தங்க வைக்க ஏற்பாடு!**

அதனைத் தொடர்ந்து, முதலமைச்சர் அவர்கள் தலைமையில் நேற்று தலைமைச் செயலகத்தில் நடைபெற்ற ஆய்வுக் கூட்டத்தில், தென்மாவட்டங்களில் கனமழை பெய்து வருவதால், அணைகளின் நீர் இருப்பை கண்காணிக்க வேண்டும் என்றும், அணைகளிலிருந்து நீரினை திறந்துவிடும் போது பொதுமக்களுக்கு உரிய முன்னெச்சரிக்கை விடுக்க வேண்டும் என்றும், தாழ்வான பகுதிகளில் வசிக்கும் மக்களை பாதுகாப்பான இடங்களில் முன்னதாகவே தங்க வைக்க வேண்டும் என்றும் அறிவுறுத்தினார்.

கனமழையால் ஏற்பட்ட பயிர் சேத விவரங்கள் உட்பட அனைத்து சேத விவரங்களையும் துரிதமாக கணக்கிட்டு, பாதிக்கப்பட்ட மக்களுக்கு நிவாரணம் வழங்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் முதலமைச்சர் அவர்கள் அறிவுறுத்தினார்.

ஏற்கனவே, முதலமைச்சர் அவர்களது உத்தரவின்படி, நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை அமைச்சர் கே. என். நேரு அவர்களும், வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை அமைச்சர் கே.கே.எஸ்.எஸ்.ஆர். ராமச்சந்திரன் அவர்களும் திருநெல்வேலி, தென்காசி மற்றும் தூத்துக்குடி மாவட்டங்களில் நிவாரணப் பணிகளை ஒருங்கிணைத்து துரிதப்படுத்தி வருகின்றனர்.

மாவட்டங்களுக்கென நியமிக்கப்பட்டுள்ள, இந்திய ஆட்சிப் பணி நிலையிலான கண்காணிப்பு அலுவலர்களும் தொடர்புடைய மாவட்டங்களில் முகாமிட்டு மாவட்ட நிருவாகத்துடன் ஒருங்கிணைந்து நிவாரணப் பணிகளை மேற்கொண்டு வருகின்றனர்.

மீட்புப் பணியில் மாவட்ட நிருவாகத்திற்கு உதவிப்புரியும் வகையில் திருநெல்வேலி, தென்காசி மற்றும் தூத்துக்குடி மாவட்டங்களுக்கு தலா ஒரு குழு வீதம், தமிழ்நாடு பேரிடர் மீட்புப் படையின் 3 குழுக்கள் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன. இதுமட்டுமன்றி, தேசிய பேரிடர் மீட்புப் படையின் ஒரு குழு திருநெல்வேலி மாவட்டம் ராதாபுரம் பகுதியில் நிலைநிறுத்தப்பட்டுள்ளது.

இந்திய வானிலை ஆராய்ச்சி மையம் அந்தமான் கடல் பகுதியில் 15.12.2024 அன்று காற்றழுத்த தாழ்வு பகுதி உருவாகும் என அறிவித்துள்ளது. அதன் காரணமாக, தமிழ்நாட்டில் ஏற்படவுள்ள மழை குறித்தும் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் விவாதித்து, தேவையான முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் மேற்கொள்ள அலுவலர்களுக்கு உத்தரவிட்டார்.

இந்தக் கூட்டத்தில், நீர்வளத்துறை அமைச்சர் துரைமுருகன், வருவாய் நிருவாக ஆணையர் / கூடுதல் தலைமைச் செயலாளர் ராஜேஷ் லக்கானி, நீர்வளத்துறை கூடுதல் தலைமைச் செயலாளர் டாக்டர் க. மணிவாசன், வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை முதன்மைச் செயலாளர் திருமதி பெ. அமுதா, வேளாண்மை – உழவர் நலத்துறை முதன்மைச் செயலாளர் செல்வி அபூர்வா, கால்நடை பராமரிப்பு, பால்வளம், மீன்வளம் மற்றும் மீனவர் நலத்துறை முதன்மைச் செயலாளர் சத்யபிரத சாகு மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

### நெல்லை மாநகரில்

# ‘நாம் தமிழர்’ கட்சியினர் 250 பேர் விலகல்!

## அமைச்சர் கே.என்.நேரு முன்னிலையில் கழகத்தில் இணைந்தனர்!

நெல்லை.டிச.15-

முதலமைச்சர், கழகத் தலைவர் அவர்களின் தலைமையை ஏற்றும், சிறப்பான நிர்வாக திறமையை கருத்தில் கொண்டும், கழக இளைஞர் அணி செயலாளர் துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் சிறப்பான செயல்பாட்டினை பார்த்தும், நெல்லை மாநகர தி.மு.க ஏற்பாட்டில் நெல்லை வண்ணார்பேட்டை அஃப்னா பார்க்கில் நடைபெற்ற நிகழ்வில் நாம் தமிழர் கட்சியினர் சுமார் 250 பேர்கள் அக்கட்சியிலிருந்து விலகி கழக முதன்மை செயலாளர்,நகராட்சி நிர்வாகத்துறை அமைச்சர், நெல்லை மாவட்ட பொறுப்பு அமைச்சருமான கே.என். நேரு முன்னிலையில் கழகத்தில் தங்களை இணைத்துக் கொண்டனர்.

நெல்லை மாநகர தி.மு.க. ஏற்பாட்டில் நெல்லை வண்ணார் பேட்டை அஃப்னா பார்கில் கழகத்தில் நாம் தமிழர் கட்சியினர் இணையும் நிகழ்வு கழக முதன்மைச் செயலாளர் நகராட்சி நிர்வாகத்துறை அமைச்சர் கே.என்.நேரு தலைமையில் நெல்லை கிழக்கு மாவட்ட செயலாளர் இரா.ஆவுடையப்பன், மாநில மாணவரணி தலைவர் ராஜீவ் காந்தி,மாநகர செயலாளர் சு.சுப்பிர மணியன், மாநில நெசவாளர் அணி செயலாளர் பெருமாள், தலைமைச் செயற்குழு உறுப்பினர் பேச்சி பாண்டியன், மாநில நெசவாளர் அணி துணை செயலாளர் பாளை தொகுதி பார்வையாளர் வசந்தம் ஜெயக்குமார் மாநில வர்த்தக அணி இணை செயலாளர் நெல்லை தொகுதி பார்வையாளர் முத்துச்செல்வி, துணை மேயர் ராஜு, தச்சை பகுதி செயலாளர் பூ.சுப்பிரமணியன் ஆகியோர் முன்னிலையில் நடைபெற்றது.

இந்நிகழ்வில் நாம் தமிழர் கட்சி மாவட்ட இளைஞரணி செயலாளர் பர்வீன் தலைமையில் நாங்குநேரி தொகுதி செயலாளர் அந்தோணி விஜய்,ஒன்றிய செயலாளர் அந்தோணி ராஜ்,நெல்லை வடக்கு மாவட்ட துணைச் செயலாளர் தேவதாஸ் உட்பட 250 பேர் அக்கட்சியிலிருந்து விலகி கழக முதன்மை செயலாளர் நகராட்சி நிர்வாகத்துறை அமைச்சர் கே.என். நேரு முன்னிலையில் கழகத்தில் தங்களை இணைத்துக் கொண்டனர்.

கழகத்தில் இணைந்த அவர்கள் அனைவரையும் அமைச்சர் கே.என். நேரு வரவேற்று கழக இருவண்ண வேட்டியை வழங்கினார்.



நெல்லை மாநகர தி.மு.க.சார்பில் கழக இளைஞர் அணி செயலாளர், துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் பிறந்தநாளை முன்னிட்டு மாநகர செயலாளர் சு.சுப்பிரமணியன் ஏற்பாட்டில் மாநகராட்சி வர்த்தக மைய கட்டிடத்தில் நெல்லை சட்டமன்ற தொகுதிக்கு உட்பட்ட கழக சொந்தங்கள் 1048 நபர்களை கௌரவிக்கும் நிகழ்வில் கழக முதன்மை செயலாளர்,நகராட்சி நிர்வாகத்துறை அமைச்சரும் நெல்லை தொகுதி பொறுப்பு அமைச்சருமான கே.என்.நேரு பங்கேற்று நலத்திட்ட உதவிகளை வழங்கினார். உடன் நெல்லை கிழக்கு மாவட்டச் செயலாளர் இரா.ஆவுடையப்பன், மாநகர செயலாளர் சு.சுப்பிரமணியன்,மாநில நெசவாளர் அணி செயலாளர் பெருமாள், தலைமைச் செயற்குழு உறுப்பினர் பேச்சிபாண்டியன், மாவட்ட துணை செயலாளர் தர்மன்,பாளை தொகுதி பார்வையாளர் வசந்தம் ஜெயக்குமார், நெல்லை தொகுதி பார்வையாளர் முத்துச்செல்வி, துணை மேயர் ராஜ், ஒன்றிய செயலாளர் அருள்மணி, பகுதி செயலாளர்கள் சுப்பிரமணியன், நமச்சிவாயம், அன்டன் செல்லத்துரை, பொதுக்குழு உறுப்பினர் நடராஜன், கழக பேச்சாளர் சிவாஜி கிருஷ்ணமூர்த்தி உள்பட பலர் உள்ளனர்.




கலைஞர் 100 1924 - 2023

# தி.மு.க. இளைஞர் அணி

## சட்டமன்றத் தொகுதி வாரியாக பாக இளைஞர்களுக்கு சமூக வலைத்தளப் பயிற்சி

### இளைஞர் அணிச் செயலாளர் உதயநிதி ஸ்டாலின் அறிவிப்பு

கழகத் தலைவர் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களது அறிவுறுத்தலின் பேரில், பாகத்திற்கு ஓர் இளைஞரைத் தேர்வு செய்து சட்டமன்றத் தொகுதி வாரியாக சமூக வலைத்தளப் பயிற்சி வழங்கி வருகிறோம். மண்டலம் 7, 8 – இல் எட்டு சட்டமன்றத் தொகுதிகளுக்கான சமூக வலைத்தளப் பயிற்சி கீழ்காணும் நாட்களில் நடைபெற இருக்கிறது. அதன் விவரம் வருமாறு :

| நாள் | நேரம் | மண்டலம் | சட்டமன்றத் தொகுதி | இடம் |
|---|---|---|---|---|
| 15.12.2024 ஞாயிற்றுக்கிழமை | காலை 9.00 மணி | 7 | பூம்புகார் | அண்ணா திருமண மண்டபம், செம்பனார்கோயில். |
| | மாலை 4.00 மணி | | புதுக்கோட்டை | எம்.ஏ.கிராண்ட் ஹோட்டல், ஜனப்ரியா சூப்பர் மார்க்கெட் அருகில், புதுக்கோட்டை. |
| | காலை 9.00 மணி | 8 | அருப்புக்கோட்டை | வேல்ராஜன் திருமண மண்டபம், அருப்புக்கோட்டை. |
| | மாலை 4.00 மணி | | சாத்தூர் | எஸ்.கே. பாரடைஸ் மஹால், சாத்தூர். |
| 17.12.2024 செவ்வாய்க்கிழமை | காலை 9.00 மணி | | சிவகாசி | நாச்சியார் மஹால், சசி நகர், சித்துராஜபுரம், சிவகாசி. |
| | மாலை 4.00 மணி | | விருதுநகர் | வி.வி.வி.அரங்கம், அம்பாள் மண்டபம் பின்புறம், அருப்புக்கோட்டை சாலை, விருதுநகர். |

அந்தந்த சட்டமன்றத் தொகுதி பாகங்களில், இப்பயிற்சிக்காகத் தேர்வு செய்யப்பட்டுள்ள இளைஞர்கள் தவறாமல், இதில் பங்கேற்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

“அன்பகம்”
தேனாம்பேட்டை
சென்னை–18
நாள் : 12-12-2024

உதயநிதி ஸ்டாலின்
செயலாளர்,
தி.மு.க. இளைஞர் அணி